IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, GUDIYATTAM,
VELLORE DISTRICT.

**CC.No. 144/2020**

| **DEPOSITION OF WITNESS** | **PW.1** |
|---|---|

| | | | |
|---|---|---|---|
| NAME | சொக்கலிங்கம் | TALUK | குடியாத்தம் |
| HUSBAND/ FATHER NAME | வீரராகவன் | RELIGION | Hindu |
| AGE | 70 | CASTE | |
| VILLAGE | | OCCUPATION | வனக்காவலர் ஓய்வு |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 27.02.2024

( எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)
(குவிமுச 311ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு இன்று குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. என்னுடைய வருமான வரி அட்டை எண் AKFPC7400F என்றால் சரிதான். இந்த வருமான வரி அட்டை என்னுடைய பெயரில் தான் உள்ளது. இந்த அட்டை என்னிடம் தான் உள்ளது. அதை நான் இந்நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை என்றால் சரிதான். அதை சமர்பிக்க சொல்லி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தாரா என்றால் இல்லை.

2. என்னிடம் இருந்தும் நான் அதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னிடம் கேட்கவில்லை. நான் எதிரி ஜெய்சங்கருக்கு பணம் கொடுத்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கில் சொல்லப்பட்ட பணத்தை 2019 வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேன்.

3.2018 ல் கொடுக்கப்பட்ட தொகைக்கு 2019 வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேன். 2016 ல் எனக்கும் எதிரி ஜெய்சங்கருக்கும் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

4. 2018 ல் தான் நான் எதிரி ஜெய்சங்கருக்கு பணம் கொடுத்தேன் 2018–2019 கொடுக்கபபட்ட பணம் 2019–2020 ல் வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேன்.

5. என்னிடம் காண்பிக்கப்படும் வருமான வரி 2019 –2020 கணக்கில் நகலில் உள்ள கையெழுத்தை அடித்து நான் அதன் மீது கையெழுத்து செய்துள்ளேன்

6.நான் தற்பொழுது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள உண்மை நகலில் என்னுடைய கையெழுத்து போட்டேன்.

7. 2016–2020 வரை வருமான வரி கணக்கை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அவைகள் ம.சா.ஆ.10 முதல் ம.சா.ஆ.13 வரை உறுதிசெய்யப்படுகிறது.

8.2019 ல் யார் யாருக்கு கடன் கொடுத்தேன் என்பதற்கான விரிவான விவரங்கள் இதில் இல்லை என்றால் சரிதான். 46,96,107 தான் எனது முதலீடு என்று குறிப்பிள்ளது என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் கடன் தெகையாக ரூபாய் 65,500,00 என்று கடனாக கொடுக்க சாத்திய கூறு இல்லை என்றால் சரியல்ல.

8. குணசேகரன் என்பவரிடம் என்னுடை விவசாய நிலத்தை ரூபாய் 25 இலட்சத்திற்கு விற்பனை செய்தேன். சர்வே எண் ஞாபகம் இல்லை. 1 ஏக்கர் 12 சென்ட் நிலம் விற்பனை செய்தேன். 93 சென்ட் நாகஷ் என்பவருக்கு விற்பனை செய்தேன் சர்வே எண் ஞாபகம் இல்லை. இவைகள் வருமான வரி கணக்கில் போலியாக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியால்ல.

9. வருமான வரி கணக்கில் காட்டப்பட்டுள்ள விவரத்தில் 3,84,000 என்று தான் காட்டபபட்டுள்ளது என்றால் அதை எனது ஆடிட்டரிடம் தான் கேட்க வேண்டும்.

10. எதிரி ஜெய்சங்கர் மீது இன்சால்வன்சி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பூந்தமல்லியில் உள்ள வீட்டின் முன்பண தொகையை நான் எனது வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேன்.

11. 2018 ல் பெற்ற பணத்திற்காக இன்சால்வன்சி மனு தாக்கல் செய்துள்ளேன். எதிரி தரப்பு வழக்கறிஞர் CMP.520/2024 எண்ணின் உத்தரவு படி கேள்வி கேட்காததால் அந்த கேள்வியை நீதிமன்றம் பதிவு செய்யவில்லை.

12. நான் தாக்கல் செய்த 2019/2020 ன் வருமான வரி கணக்கின் முதல் பக்கம் வேறு என்றாலும் அதில் உள்ள பக்க இணைப்புகள் வேறு என்றால் சரியல்ல. அதை குறித்து உண்மை தன்மையை அறிய வருமான வரி துறையினரை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான்.

13.எனது வருமானமே 4,58,000/- என்பதாலும் நான் கடன் கொடுத்ததாக சொல்வது பொய் என்றாலும் மேலும் நான் எனது விவசாய நிலத்தை விற்பனை செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. உண்மையாகவே விற்பனை செய்திருந்ததால் என்றைய தேதி, எந்த சர்வே எண் உண்டான சொத்தை விற்பனை செய்தேன் என்று சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.

14. மேற்சொன்ன சொத்துகளை விற்பனை செய்து விட்டேன். பத்திர பதிவு நடக்கவில்லை. எனது வருமான வரி கணக்கதில் முன்பணம் என்று குறிப்பிட்டு விட்டு நான் விற்பனை செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

15. எந்த சொத்திற்காக நான் முன்பணம் மற்றும் கடன் கொடுத்ததாக எனது வருமான வரி கணக்கில் காட்டவில்லை என்றால் சரியல்ல.

16. வருமான வரியின் எனது நகல் என்னிடம் நான் அழித்து விட்டேன். பூந்தமல்லி வீட்டிற்கு அக்ரிமேட் போட்டுவிட்டு அதனை வருமான வரியில் காட்டவில்லை என்றால் சரிதான்.

17. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் உண்மைக்கு புரம்பானவை என்பதாலும் அதை ஏற்றுக்கொள்ள தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/. M.N.Rajananhivarmasiva,
Judicial Magistrate (FAC)
Gudiyatham.